1998 நவம்பர் 27]

## (அ) மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து விளக்கம்—தொடர்ச்சி.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவையினுள் நுழைந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உள்ளே வரக்கூடாது. டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்றுங்கள்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவைத் தலைவர் இருக்கைக்கு வலப்புறம் செயலாளர் இருக்கைக்கு அருகில் தரையில் அமர்ந்துகொண்டு பேசினார்.)

நீங்கள் யாரிடம் கேட்டாலும், என் அனுமதி இல்லாமல் உள்ளே வரக்கூடாது. டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்றுங்கள்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குளிர்காலக் கூட்டத் தொடர் நாளையதினம் நிறைவுறுகிற நேரத்தில் ஏதாவது Stunt – நாடகக் காட்சியை – நடத்திக்காட்ட வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி விரும்பி, எண்ணி, அதை இங்கே செயல்படுத்த முனைகிறார். இதற்கான விளம்பரங்களை ஏடுகள் அல்லது மற்றவர்கள் தராமல் இருந்தால்தான் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தமிழகத்திலே எல்லாக் கட்சிகளும், கட்டிக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகின்ற மரபுகளைப் பேணிப் பாதுகாக்க முடியும் என்பதை ஏடுகளுக்கும், மற்ற கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பணிவன்போடு இந்த வேண்டுகோளையும் விடுக்கின்றேன்.

அடுத்ததாக, மாஞ்சோலை எஸ்டேட்டிலே கொத்தடிமை முறை இருப்பதாகச் சொல்கிறார். அந்த மாஞ்சோலை எஸ்டேட் ஏறத்தாழ 70 ஆண்டுகாலத்திற்கு மேலாக வெள்ளைக்காரர் ஆட்சியில், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் மற்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிற ஆட்சிகளில் எல்லாம் இருந்து வருகின்றது. அந்த மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளர்களுடைய நிலை அனைவருக்கும் நன்றாகத் தெரியும். பல யூனியன்கள் — தொழிலாளர் யூனியங்கள் — அங்கே

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 நவம்பர் 27

இருக்கின்றன. சட்டரீதியான தங்களுடைய கோரிக்கைகளுக்கு சட்டபூர்வமான அளவிலே போராட்டங்களை அறவழியில் நடத்துகின்ற பல யூனியன்கள் அங்கே இருக்கின்றன. அன்றைக்கு நான் அதைக் குறிப்பிட்டுச் சொன்னபோதுகூட, அவர் என்னைத் தனியாகத் தங்களுடைய அறையிலே சந்தித்தபோது, எங்கே யூனியன் இருக்கிறது, எந்த யூனியனும் இல்லை என்று என்னிடத்திலே சொன்னார். ஆனால், அங்கே பல யூனியன்கள் இருக்கின்றன. அந்த யூனியன்கள் சார்பாகத்தான் D.M.K., A.D.M.K., I.N.T.U.C, மற்றும் C.I.T.U. போன்ற அந்தக் கட்சிகளின் தலைவர்கள், அந்த யூனியன்களின் தலைவர்கள் எல்லாம்கூட கொத்தடிமை முறை மாஞ்சோலைப் பகுதியிலே இல்லை, அது தவறான செய்தி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இருந்தும்கூட அங்கே கிருஷ்ணசாமி அவர்கள் வலியச் சென்று, அங்குள்ளவர்களிடம் ரூபாய் 57.17 பைசா ஒரு நாள் சம்பளம் பெறுகின்றவர்களுக்கு 150 ரூபாய் வாங்கித் தருகிறேன் என்று கூறியிருக்கின்றார். ரூ. 50.17 என்பது ரூ. 150 ஆக இவரால் உயரும் என்று எதிர்பார்க்கிற காரணத்தால், சிலபேரை அவரால் அங்கே திரட்ட முடிந்திருக்கின்றது.

முற்பகல் 11-15

எப்படியும், வருகிற இரண்டொரு மாதங்களுக்குள் அங்கே இந்தச் சம்பளப் பிரச்சினைக்காக அவர்கள் கூடிப் பேசி ஒரு முடிவு எடுக்க இருக்கின்றார்கள், நியதிப்படி, முறைப்படி, விதிப்படி. அப்படி இருக்கும்போது, 'பனம்பழம் விழப் போவதைத் தெரிந்து, அதிலேபோய் காக்கை உட்காருவதைப் போல, அவர், தன்னால்தான் இந்தப் பனம்பழம் விழுந்தது என்பதைக் காட்டி, அங்குள்ள தொழிலாளிகளை ஏமாளிகளாக ஆக்கி, தான் விளம்பரம் பெறக் கருதுகின்றார் என்பதுதான் அப்பட்டமான உண்மையாகும். இவருடைய கூற்றை ஏற்காமல் வேலைக்குச் சென்றவர்கள் மிரட்டப்பட்டது மாத்திரம் அல்ல; கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அந்தக் கொலைக்குத் தூண்டுதலாக இருந்தவர்களிலே இவரும் ஒருவர் என்று கொலையுண்டவருடைய துணைவியாரே புகார் கொடுத்திருக்கிறார். அது பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த விசாரணை முடிவடையும் தருவாயிலும் இருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையிலே, விசாரணையிலேயிருந்து தப்பவோ அல்லது தான் நிரபராதி என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவோ நாடகம் ஆடுவதை இந்த அவை ஏற்றுக்கொள்ளாது என்று நான் திடமாக நம்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த அவையிலேயுள்ள

கிருஷ்ணசாமியைத் தவிர, அனைத்து உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளைக் கடந்து கிருஷ்ணசாமியினுடைய போக்கை ஆதரிக்கவில்லை என்பதை நான் மிக நன்றாக அறிவேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக வெளியிலேயுள்ள கட்சிகள்கூட அவருடைய போக்கை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இப்படிப்பட்ட சக்திகளை வளர விடுவது தமிழகத்திற்கே தீதானது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

**(ஆ) காட்பாடி வெடிமருந்து தொழிற்சாலை தயாரிக்கும் வெடி பொருட்கள் வினியோகத்தைக் கண்காணித்தல்**—தொடர்ச்சி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி வெடி மருந்து தொழிற்சாலையில், நாட்டின் நலன் கருதி அங்கு தயாரிக்கப்படுகிற வெடிபொருட்கள் விநியோகத்தைத் கண்காணிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டில் வெடிகுண்டு பதற்றம் இருக்கிறது. தீவிரவாதிகள், சமூக விரோதிகள் அதைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக ஏற்கெனவே சட்டசபையில் பேசியிருக்கின்றேன், இரண்டு தடவை பேசியிருக்கின்றேன். ஆகவே, தொழிற்சாலையைக் கண்காணிக்க ஒரு Vigilance அதிகாரியாக, ஒரு I.P.S. அதிகாரியைப் போட வேண்டும். மேலும் Security Guard அங்கே ஒரு வருடமாக இல்லாமல் இருக்கிறது. Security Guard-ம் போட வேண்டும். ஏற்கெனவே, E.B. மற்றும் Service Commission எல்லாம் I.P.S. அதிகாரிகளை Vigilance அதிகாரிகளாகப் போட்டிருக்கிறார்கள். அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முக்கியமான பிரச்சினை. முதலமைச்சர் மவுனமாக இருக்கிறார். ஏதேதோ பிரச்சினைகளுக்கெல்லாம் பதில் சொல்கிறார்கள். (பலத்த சிரிப்பு) தலைவர் அவர்களே காட்பாடியிலே ஒரு வெடிமருந்து தொழிற்சாலை இருக்கிறது. தமிழ்நாட்டில் வெடிகுண்டு பற்றிய ஒரு